# ஆன்ம விசாரம்

## பகவத்கீதையும் திருமந்திரமும்

- சி.நிரோசன், தி.திலீபன் -


### ஆய்வுச்சுருக்கம்

நான் யார்? எனும் ஆன்மாவின் வினாவுக்குப் பதில்காணும் முயற்சியாக ஆன்ம விசாரம் அமைகின்றது. தன்னை அறிதலையும், அதன் வழி உண்மைப் பொருளை அறிதலையும் இந்திய தத்துவப் பிரிவுகள் முதன்மைக்குரியனவாக எடுத்தாண்டன. இதுவே ஆன்ம விசாரம் என்றும் பிரம்ம விசாரம் என்றும் அழைக்கப்பட்டது. வைதிக தரிசனங்கள் அனைத்தும் வேத, உபநிடதங்களின் வழிநின்று பிரம்மம், ஆன்மா, உலகு ஆகிய முப்பொருட்களின் உண்மைத் தன்மை குறித்து விளக்கி, வாழும் மானுடர்க்கு ஆன்ம ஞானத்தை வழங்கத் தலைப்பட்டன. இவ் உன்னத பணியில் உபநிடதங்களின் சாரமாக விளங்கும் பகவத்கீதையும், திருமுறைகளுள் ஒன்றான திருமந்திரமும் முதன்மை ஸ்தானத்தைப் பெறுகின்றன. பகவத்கீதை விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக்கொண்டு ஆன்மாவின் இருப்பு, இயல்பு, ஆன்மாவுக்கும் பரமாத்மாவுக்குமான தொடர்பு, முத்தி என்பன குறித்த ஆன்ம ஞானத்தை வழங்கி நிற்க, திருமந்திரம் சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு அவற்றை விளக்குகின்றது. இவ்வாய்வானது பகவத்கீதையையும் திருமந்திரத்தையும் ஆதாரமாகக்கொண்டு அவை தெளிவுபடுத்தி நிற்கும் மெய்பொருள் ஆய்வுகளை ஒப்புநோக்கி ஆன்ம விசாரம் குறித்து பகுப்பாய்வுசெய்து அதனூடே அவை விபரித்து நிற்கும் ஆன்ம ஞானத்தைப் புரிந்துகொள்வதற்கான முயற்சியாக அமைகின்றது. ஆன்மா நித்தியமானது என்றும்; ஆன்மாவின் களமாகிய உடல் அழிவுடையது என்றும்; ஆன்மா உணர்வுமயமானது என்றும்; உணர்வுமயமான ஆன்மா தன்னை உணர்வதோடு, தன்னுள் இருக்கும் பரப்பிரம்மனை உணரும்போது அது பிரம்மனாகிறது என்றும்; அதுவே முத்தி என்றும் பகவத்கீதை விளக்கி நிற்கின்றது. ஆன்மா உடலினின்று வேறானது என்றும், உடலின்றி ஆன்மா தனித்து இயங்காது என்றும், பிரம்மத்தைப் போல் ஆன்மா அனாதியானது என்றும், அது மும்மலங்களால் பீடிக்கப்பட்டுள்ளது என்றும், பரம்பொருளின் அருளால் மலங்கள் நீங்கி ஆன்மா தன்னியல்பை அறியும்போது அது தன்னுள் பிரம்மத்தைக் கண்டு சிவப்பேறாகிய பெரும்பயனை அடைந்து பதியுடன் இரண்டறக் கலந்து பேரின்பநிலையாகிய முத்தி நிலையை அடைகிறது என்றும் திருமந்திரம் விளக்கி நிற்கின்றது. எனவே வேத இலக்கியங்களின் மஹாவாக்கியங்கள் சுட்டுவது போன்று 'ஆத்மனும் பிரம்மனும் இரண்டல்ல; ஒன்றே' என்பதனை வலியுறுத்தும் இவ்விரு நூல்களும், முழுமுதற் கடவுள் பற்றிய கருத்தில் வேறுபட்டு நிற்பினும் ஆன்ம விசாரத்தில்

ஒன்றுபட்டே நிற்கின்றன என்பதனை இவ்வாய்வு வெளிக்கொணர்கின்றது. இவ்வாய்வானது விபரண முறை, பகுப்பாய்வு முறை, ஒப்பீட்டு முறை ஆகிய முறைகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், ஆய்வுக்கான தரவுகள் பகவத்கீதைக்கான உரைநூல்கள், திருமந்திரத்திற்கான உரைநூல்கள், பகவத்கீதை மற்றும் திருமந்திரம் குறித்த நூல்கள், ஆய்வுக்கட்டுரைகள் முதலான இரண்டாம் நிலைத்தரவுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

பிரதான சொற்கள்: பகவத்கீதை, திருமந்திரம், ஆன்ம விசாரம், பிரம்மம், முத்தி

## அறிமுகம்

தன்னை அறியும் முயற்சியே மெய்யியலின் தோற்றுவாய் எனலாம். மெய்யியலின் தந்தை என சிறப்பிக்கப்படும் கிரேக்க தத்துவஞானியான சோக்கிரட்டீஸ் 'உன்னையே நீ அறி' என்கிறார். இதுவே இந்திய மெய்யியலின் அடிநாதமாகவும் விளங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. அதாவது உண்மைத்துவத்தின் இயல்பினை வரையறை செய்யும் முயற்சி தன்னைப் பற்றிய சிந்தனையோடு அல்லது புறப்பொருள் பற்றிய எண்ணத்தோடு ஆரம்பிக்கின்றது என்பர். இந்திய மெய்யியலைப் பொதுவாக தரிசனம் என அழைப்பர். உண்மையின் உள்ளுணர்வுக் காட்சி என்பது அதன் பொருள். பெரும்பாலான இந்திய தத்துவப் பிரிவுகள் தன்னை அறிதலையும் அதன்வழி உண்மைப் பொருளை அறிதலையும் முதன்மைக்குரியதாக எடுத்தாள்கின்றன. இதுவே ஆன்ம விசாரம் என்றும் பிரம்ம விசாரம் என்றும் அழைக்கப்பட்டது. இந்த விசாரணைகளின் வழி ஏற்பட்ட புரிதல்களை ஆதாரமாகக்கொண்டு ஒவ்வொரு தத்துவப் பிரிவுகளும் பிரம்மம், ஆன்மா, உலகு என்பன குறித்த வெவ்வேறானதும், ஒன்றுபட்டதுமான விளக்கங்களை வழங்கி நிற்கின்றன.

வைதிக தரிசனங்கள் அனைத்தும் வேத, உபநிடதங்களின் வழிநின்று மேற்படி முப்பொருட்களின் உண்மைத் தன்மை குறித்து விளக்கலாயின. வாழும் மானுடர்க்கு ஆன்ம ஞானத்தை வழங்கத் தலைப்பட்டன. இவற்றுள் பகவத்கீதை முதன்மை ஸ்தானத்தைப் பெறுகின்றது. ஏனெனில் அது பரமாத்மாவாகிய ஸ்ரீகிருஷ்ணனால் ஜீவாத்மாவாகிய அர்ஜுனனுக்கு போர்க்களத்தில் உபதேசிக்கப்பட்டது. இந்து மதத்தில் எண்ணற்ற சாஸ்திரங்கள் உள்ளன. பொதுவாக அவை அனைத்திற்கும் வேதங்களே முதற்காரணம் என்பர். வேதங்களின் இறுதிப் பகுதியாக உபநிடதங்கள் விளங்குகின்றன. மெய்பொருள் ஆராய்ச்சியில் உபநிடதங்களின் போக்கினை விளக்குவது பிரம்மசூத்திரம். இதற்கு வேதாந்தசூத்திரம் என்ற பெயரும் உண்டு. பிரஸ்தானதிரயங்களில் ஒன்றான பகவத்கீதை உபநிடதக் கருத்துக்களைத் தெளிவுபட விளக்கி நிற்கின்றது. பகவத்கீதை கீதோபநிஷத் என்றும் அறியப்படுகின்றது. உபநிடதங்களைப் பசுக்களாகவும், பகவத்கீதையைப் பாலாகவும் உவமிக்கின்றனர் அறிஞர்கள். மஹாவாக்கியங்கள் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்குமான தொடர்பைக் கூறுகின்றன. வேதங்களில் சொல்லப்பட்டுள்ள நான்கு மகாவாக்கியங்களுக்குள் மிகச் சிறப்புடையது 'தத்துவமஸி' என்ற மகாவாக்கியம். இதற்கு உயர்ந்த விளக்கம் தரும் பகவத்கீதை விஷ்ணுவை முழுமுதற் கடவுளாகக்கொண்டு ஆன்மாவின் இருப்பு, இயல்பு, முத்தி என்பவை குறித்த ஆன்ம ஞானத்தைக் குறைவின்றி வழங்குகின்றது.

வேதாந்தம் என்ற மரத்தில் காய்த்துப் பழுத்த கனியே சைவசித்தாந்தம் என்கிறார் குமரகுருபரர். சைவசித்தாந்த நூல்கள் பதினான்கு. இவை மெய்கண்டசாஸ்திரங்கள் எனப்பட்டன. பதி, பசு, பாசம் பற்றிய எண்ணக்கருக்களைத் தெளிவாகவும் காத்திரமான முறையிலும் விளக்கும் திருமந்திரம் பதினான்கு மெய்கண்டசாஸ்திரங்களுக்கும் முதன்நூலாக விளங்குகின்றது. திருமந்திரம் திருமூலரால் அருளிச்செய்யப்பட்டது. தோத்திரவியலாகவும், சாத்திரவியலாகவும் விளங்குகின்ற திருமந்திரம் ''மூலன் உரைசெய் மூவாயிரம் தமிழ்'' என வர்ணிக்கப்படுகின்றது. இந்நூல் ''தமிழ் வேதாகமம்'' என்ற சிறப்புப் பெயரினையும் பெறுகின்றது. திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது. அது ஒன்பது தந்திரங்களாக உள்ளது. முதல் ஐந்து தந்திரங்களும் பொது எனும் அம்சமாகவும் பின்னைய நான்கு தந்திரங்களும் சிறப்பு எனும் அம்சமாகவும் காணப்படுகின்றன. இந்தப் பொது சிறப்பு தந்திரங்களைக் கொண்ட மூவாயிரம் பாடல்களைக் கொண்டமைந்ததே திருமந்திரம் ஆகும். திருமூலர் பல்லாண்டு தியானத்திலிருந்து தெளிந்த உண்மைகளை ஓதினார் என்பதே பொருந்தும். அது மட்டுமல்ல திருமூலநாயனார் ஆரிய மொழியிலுள்ள நான்மறைகள், உபநிடதங்கள் முதலியவற்றைத் தேர்ந்து தெளிந்தவர். அவர் தாமறிந்த தத்துவ உண்மைகளைத் தமிழ் மொழியில் சொல்வதற்குப் பேராசை கொண்டவரானார்.

தத்துவ நூல்களைத் தேர்ந்து தெளிந்து திருக்கூத்தின் இயல்பைக் கூறுவதே நம் வாழ்க்கையின் நோக்கம் என நம்மனார்க்கு அழகுற விளம்பினார் நாயனார். தமிழ் மொழியில் மெய்ப்பொருளைச் செப்புவதற்கே நம்மை இறைவன் படைத்தனன் என எண்ணினார் திருமூலர்.

*''பின்னைநின்று என்னே பிறவி பெறுவது*
*முன்னைநன் றாக முயல்தவம் செய்கிலர்;*
*என்னைநன் றாக இறைவன் படைத்தனன்*
*தன்னைநன் றாகத் தமிழ்செய்யு மாறே''* *(திருமந்திரம்: 81).*

பன்னிரு திருமுறைகளிலே பத்தாவது திருமுறையாக விளங்கும் சிறப்புடைய நூலாகிய திருமந்திரமும் சிவனை முழுமுதற் கடவுளாகக்கொண்டு ஆன்ம ஞானத்தை வழங்குகின்றது.

இவ்வாய்வானது பகவத்கீதையையும், திருமந்திரத்தையும் ஆதாரமாகக்கொண்டு அவை தெளிவுபடுத்தி நிற்கும் மெய்பொருள் ஆய்வுகளை ஒப்புநோக்கி ஆன்ம விசாரம் குறித்து பகுப்பாய்வு செய்து அதனூடே அவை விபரித்து நிற்கும் ஆன்ம ஞானத்தைப் புரிந்து கொள்வதற்கான முயற்சியாக அமைகின்றது.

## பகவத்கீதையில் ஆன்ம விசாரம்

பகவத்கீதை ஆன்ம ஞானத்தை உபதேசிக்கிறது. இந்த ஆன்ம ஞானத்தைப் பற்றிக் கொண்டால் அனைத்து துக்கங்கள், துன்பங்கள், தொல்லைகளிலும் இருந்து விடுபட்டு ஆன்ம ஈடேற்றத்திற்கு வழிபிறக்கிறது. ஆன்மாவின் இருப்பையும், அதன் இயல்பினையும் உணர்ந்துகொள்வது ஆன்ம ஈடேற்றத்திற்கு அடிப்படை நிபந்தனையாகின்றது எனலாம். எனவே பகவத்கீதையைப்

பொறுத்தவரை ஆன்ம விசாரமும் அதன் வழியேற்படும் ஆன்ம ஞானமும் முதன்மைக்குரிய அம்சங் களாகின்றன.

பகவத்கீதையின் இரண்டாவது அத்தியாயத்தின் பதினோராவது சுலோகத்திலிருந்தே பகவானின் உபதேசம் ஆரம்பமாகின்றது. ஆதலால் இதுவே கீதா உபதேசத்தின் முதற் சுலோகமாகக் கருதப்படுகின்றது. சங்கரரும் இதனையே முதற் சுலோகமாகக் கருதி இச்சுலோகத்திலிருந்தே தனது உரையை ஆரம்பித்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது (ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி, 2002: 31). இவ் அத்தியாயத்தின் முப்பதாவது சுலோகம் வரையில் ஆன்மாவின் இயல்பு குறித்து பகவான் உபதேசித்துள்ளார். சோகத்திற்குக் காரணமே இல்லை என்றும், அறியாமையின் விளைவாகவே சோகம் ஏற்படுகின்றது என்றும், ஆத்மஞானம் பெற்றவனுக்குச் சோகம் ஏற்படுதில்லை என்றும் வலியுறுத்திய பகவான் ஸ்ரீகிருஷ்ணர் இங்கு ஆத்ம ஞானத்தின் அவசியத்தையே உபதேசிக்கின்றார்.

*''அஷோச்யான் அன்வஷோ சஸ் த்வம் ப்ரக்ஞா-வாதாம்ஸ்ச பாஷஸே*
*கதாஸூன் அகதாஸூம்ஷ்ச நானுஷோசந்தி பண்டிதா: (பகவத்கீதை, 2.11)*

உடல் என்றால் என்ன? ஆத்மா என்றால் என்ன? என்பதனை அறிந்த உண்மையான அறிஞன் உடலின் எந்த நிலைக்கும் உயிரோடு இருந்தாலும் இறந்தாலும் வருந்துவதில்லை என்கிறது பகவத்கீதை. எனவே இவ்வுலக வாழ்வின் அறியாமையிலிருந்து மனித குலத்தை விடுவிப்பதே பகவத்கீதையின் நோக்கமாகும். இது ஆன்ம விசாரத்துடன் இன்றியமையாத தொடர்புடையதாகும். இந்த ஆன்ம விசாரம் பகவத்கீதையில் சிறப்பாக இடம்பெற்றிருக்கின்றது.

சாந்தோக்கிய உபநிடதத்தில் 'பிரம்மம்' எனும் பதமானது உண்மையான ஆன்மாவைச் சுட்டுவதாக விளங்கியமை, மாண்டூக்கிய உபநிடதத்தில் 'இந்த ஆத்மனே பிரம்மம்' எனக் குறிப்பிடப்படுதல், பிரகதாரண்ய உபநிடதம் 'பன்மைத்துவத்திற்கு இடமில்லை; ஆத்மன் ஒன்று மட்டுமே உண்மையானது' என எடுத்துரைக்கின்றமை போன்ற சான்றுகளை மேற்கோள்காட்டி, பேராசிரியர் ஞானகுமாரன் 'ஆத்மன்', 'பிரம்மம்' இரண்டும் உபநிடதங்களில் ஒன்றிற்கு ஒன்று மாற்றீடாகப் பயன்படுத்தப் பட்டிருப்பதனைச் சுட்டிநிற்பது (வேதாந்த மெய்யியல், 23-24) இங்கு மனங்கொள்ளத்தக்கது.

ஆன்மாவினுடைய இருப்பையும், இயல்பையும் குறித்த தெளிவை ஏற்படுத்த பகவத்கீதை முனைகின்றது. ''முன்பு எப்பொழுதாவது நான், நீ, இவ்வரசர்கள் ஆகியவர்களில் யாராவது இல்லாதிருந்ததில்லை. இக்காயங்கள் அழியுமிடத்தும் நாம் இல்லாமற் போகமாட்டோம்'' என்று பகவான் அர்ஜுனனுக்குப் போதிக்கின்றார். கடோ உபநிடதத்திலும் சுவேதாஷ்வர உபநிடதத்திலும் எண்ணற்ற ஜீவன்களை அவர்களின் தனிப்பட்ட செயல்களையும் விளைவுகளையும் அடிப்படையாகக்கொண்டு, பரம புருஷ பகவான் பல்வேறு நிலைகளில் பராமரித்து வருகின்றார் (பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 2008: 93) என்று கூறப்பட்டுள்ளமை இங்கு நோக்கத்தக்கது.

உடல்கள் அனைத்தும் தோன்றியவாறு அழியும். தேகங்களுக்குள் குடியிருக்கும் ஆத்மா அழிவற்றது. அது முக்காலத்திலும் உள்ளது. உடலைப் போன்று ஒருகாலத்தில் இருந்து இன்னாரு காலத்தில் இல்லாமல் போய்விடும் தன்மை அதற்கு இல்லை. ஆன்மாக்கள் அனைத்தும் நித்தியமானவை. அவை இதற்கு முன் தனித்துவம் இல்லாமல் இருந்தன என்பதோ, எதிர்காலத்தில் நித்தியமானவையாக இருக்கமாட்டாதவை என்பதோ இல்லை. ஆன்மாவானது உடலைச் சேர்வதற்கு முன்னரே வசித்துள்ளமையை கிரேக்க அறிஞரான பிளேட்டோவும் நம்பியமை இங்கு சுட்டிக்காட்டத்தக்கது. மாயையால் மூடப்பட்டிருகின்ற தனித்துவம் கொண்ட ஆன்மா முத்திக்குப் பின், அருவ பிரம்மனில் கலந்து தனது தனித்துவத்தை இழந்துவிடுகின்றது என்ற மாயாவாதக் கொள்கையோ, தனித்துவம் கட்டுண்ட நிலையின் காரணமாக உணரப்படுகின்றது என்ற கொள்கையோ பகவத்கீதைக்கு ஏற்புடையதல்ல (பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 2008: 94).

உயிர்வாழும் ஒவ்வொன்றும் தனித்தனி ஆன்மா என்பதோடு, அவை ஒவ்வொன்றும் தமது உடலை ஒவ்வொரு கணமும் மாற்றிக்கொண்டே இருக்கின்றன. ''ஆன்மாவுக்கு இவ்வுடலில் இளமையும், யௌவனமும், மூப்பும் உண்டாவது போல் வேறு உடல் எடுப்பதும் அமைகின்றது. தீரன் அதன் பொருட்டு மயங்கான்'' (ஸ்ரீமத் சுவாமி சித் பவானந்தர், 1999: 105). ஒரு மனிதனை எடுத்துக்கொண்டால் அவன் சில காலங்கள் சிறுவனாகவும், சில காலங்கள் வாலிபனாகவும், இன்னும் சில காலங்கள் வயோதிபனாகவும் அவனது உடலில் மாற்றங்கள் ஏற்பட்ட வண்ணமே உள்ளன. இந்த மாறுதல்கள் எல்லாம் ஒரே மனிதனிடத்து உண்டாகின்றன (உடல் மாற்றங்களுக்கு உள்ளாகின்றது). இங்கு சிறுவனாக இருந்தவன் ஒருவன் என்றும் வாலிபனாக இருந்தவன் இன்னொருவன் என்றும் வயோதிபனாக இருந்தவன் மற்றொருவன் என்றும் கூறுதல் பொருத்தமற்றதாகும். இங்கு ஆன்மா மாற்றமடைவதில்லை. மரணத்தின் போது ஆன்மா உடலை மாற்றி வேறோரு உடலைச் சேர்கின்றது. இரண்டாவது அத்தியாயத்தின் இருபத்திரண்டாவது சுலோகமும் இதனை உவமை மூலம் விளக்கி நிற்கின்றது.

*''வாஸாம்ஸி ஜீர்ணானி யதாவிஹாய நவானி க்ருஹ்ணாதி நரோஷபராணி*
*ததாஷ ரீராணி விஹாய ஜீர்ணான்யன்யானி ஸம்யாதி நவானி தேஹி''*

***(பகவத்கீதை, 2.22)***

ஒருவர் நைந்த பழைய ஆடைகளைப் புறக்கணித்து விட்டு, புதிய ஆடைகளை அணிவதைப் போன்று உபயோகமற்ற பழைய உடல்களை நீக்கி ஆன்மா புதிய உடல்களை ஏற்கிறது. அடுத்த பிறவியில் அது வேறு உடலை அடைவது திண்ணம் (அது பௌதிக உடலாகவோ, ஆன்மீகமாகவோ இருக்கலாம்). இந்த மாறுபாடுகள் யாவும் உடலினுடையது என்றும் மாறாத் தன்மை ஆன்மாவினுடையது என்றும் அறியவேண்டும்.

உடல் என்னும் வீட்டிலே வசிப்பவன் புருஷன். இன்பமும் துன்பமும் ஐம்பொறிகள் புறவுலகைப் பொருந்துவதனால் தோன்றி மறைகின்றன. உடலைத் தான் என்று எண்ணுபவன் இந்த இன்ப துன்பங்களுக்கு ஆளாகின்றான். அவை நிலையில்லாதவை. ஒரு சந்தர்ப்பத்தில் எமக்கு இன்பம் தருவது மற்றொரு சந்தர்ப்பத்தில் எமக்கு துன்பத்தைத் தருகின்றது. ஆன்ம

ஞானம் பெற்றவன் இவற்றால் சஞ்சலப்படுவதில்லை (பகவத்கீதை, 2.14, 2.15). இதனை இரண்டாவது அத்தியாயத்தின் பதினான்காம், பதினைந்தாம் சுலோகங்கள் தெளிவுபடுத்தி நிற்கின்றன.

பகவத்கீதை ஆன்மாவை உள்ளது (ஸத்து) என்றும் உடலை இல்லாதது (அஸத்து) என்றும் விளக்கி நிற்பதையும் நாம் காணலாம். உடலுக்கு 'இருக்கின்றேன்' என்ற உணர்ச்சியில்லை. அது இடையில் வந்து, விகாரங்களுக்கு உட்பட்டு இறுதியில் மறையும் தன்மையுடையது. ஆதலால் இருக்கும் பொழுதும் இல்லையென்றாகின்றது. ஆனால் ஆன்மாவோ இருக்கின்றேன் என்ற உணர்ச்சி அல்லது பிரக்ஞை வடிவானது, தோற்றம் விகாரம் மறைவு இன்றி நித்தியமாய் உள்ளது. ஆன்மா உடல் முழுவதும் பரவியுள்ளது. உடல் முழுவதும் உணர்வு பரவியிருப்பதனைப் பொதுவாக அனைவரும் அறிவர். இவ்வாறு பரவியுள்ள உணர்வு அவனது சொந்த உடல் என்ற வரம்பிற்குட்பட்டது. ஓர் உடலினுடைய இன்ப துன்பங்கள் மற்றவர்களுக்குத் தெரியாது என்பதனால் ஒவ்வொரு உடலும் தனி ஆன்மாவை உடையதாகும். உணர்வற்ற சடவுடல் பிணமாகும். எத்தகைய சட முறையினாலும் பிணத்தினுள் இவ் உணர்வை மீண்டும் புதுப்பிக்கமுடியாது. உணர்வு ஆன்மாவினால் ஏற்படுவதே அன்றி, சடப்பொருட்களினால் ஏற்படுவதில்லை என்பதனை முண்டக உபநிடதமும் வலியுறுத்தி நிற்கின்றது (பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 2008: 102).

பகவத்கீதையின் பதின்மூன்றாம் அத்தியாயம் ஆன்ம விசாரத்தினை மற்றுமொரு பரிமாணத்தில் விளக்குகின்றது. அறியப்படும் பொருளும், அறிபவனும் வேறு வேறானவை என்கிறது பகவத்கீதை. என்னால் அறியப்படும் பொருட்களில் எனக்கு நான் என்ற உணர்வு இருப்பதில்லை. ஆனால் எனது உடலை யாரேனும் தொட்டால் 'யார் என்னைத் தொட்டது?' என வினவுகின்றோம். எனவே எனது உடலில் நான் என்ற உணர்வு இருப்பதனால் நான் இந்த உடல் என்கிறோம். ஆனால் மற்றவர்களின் உடலைக் காண்பது போலவே நான் எனது உடலையும் அறிகின்றேன். மற்றவர்களின் உடலை அறிவதனை விட எனது உடலை நான் நன்கு அறிகின்றேன். எனவே என்னால் அறியப்படும் பொருளான இந்த உடல் நான் அல்ல. ஆன்மா என்பது உடல் அல்ல. அது உடலில் இருந்து வேறானது. நான் இந்திரியங்களோ எனின் நான் இந்திரியங்களும் அல்ல. ஏனெனில் எனது கண்கள் நன்றாகப் பார்க்கின்றது என்பதனையோ சரியாகப் பார்க்கவில்லை என்பதனையோ நான் அறிந்துகொள்கின்றேன். எனவே எனது இந்திரியங்களும் என்னால் அறியப்படும் பொருட்களாகின்றன. நான் எனது மனமோ எனின் நான் மனமும் இல்லை. மனதின் உதவியினால் எனது இந்திரியங்களை இயக்குவதனாலும், மனதின் இயல்புகளான அமைதியுற்றிருத்தல், அமைதியற்றிருத்தல், கோபமாக இருத்தல், சோகமாக இருத்தல் என்பன என்னில் பிரதிபலிப்பதனாலும் நான் மனம் என்ற எண்ணம் எனக்கு ஏற்படலாம். ஆனால் எனது மனம் அமைதியுற்றிருப்பதனை, அமைதியற்றிருப்பதனை, சோகமாக இருப்பதனை, கோபமாக இருப்பதனை நான் அறிகின்றேன். எனவே நான் மனமும் அல்ல. நான் புத்தியோ எனின் நான் புத்தியுமல்ல. எனது தொழிலைக்கொண்டு நான் வைத்தியன், நான் விரிவுரையாளன் என்று கூறமுடியாது. ஏனெனில் அவை எனது புத்தி சாதுரியத்தால் ஈட்டிக்கொள்ளப்பட்டவை. எனது புத்தி எதை அறிந்துள்ளது,

எதை அறியவில்லை என்பதனை நான் அறிகின்றேன். எனவே நான் புத்தியுமல்லன். நான் அறியாமையோ என்றால் அறியாமையுமல்ல. ஏனெனில் 'எனக்குத் தெரியும்' என்பதனையும் நான் அறிவேன், 'எனக்குத் தெரியாது' என்பதனையும் நான் அறிவேன். மேலும் இவை அனைத்தையும் நான் எனது உடல், எனது இந்திரியங்கள், எனது மனம், எனது புத்தி, எனது அறியாமை என்றவாறாக எனது உடைமையாகக் கூறுகின்றேன். நான் அறியப்படும் பொருளைப் பொறுத்து நான் அறிபவனாக இருக்கிறேன். அவை இல்லாவிடில் நான் அறிபவனின் சாரமாக, அனைத்தையும் உணர்பவனின் சாரமாக இருக்கிறேன். அறிபவனின் சாரம் சைதன்யம், உணர்வு ஆகும் (ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி, 2002: 42-48). இதனையே பகவத்கீதை ஆன்மா உணர்வுமயமானது என்கிறது.

பகவத்கீதையின் பதின்மூன்றாவது அத்தியாயத்தின் இரண்டாவது சுலோகத்தில் உடலின்றி ஆன்மாவிற்குச் செயல்களில்லை என விளக்கப்படுகின்றது. உடலே களம் (க்ஷேத்திர) என்றும் உடலை அறிபவன் களத்தை அறிபவன் (க்ஷேத்திரக்ஞ) என்றும் அழைக்கப்படுகின்றன என்கிறது கீதை. கண்டுண்ட ஆன்மாவின் செயல்களுக்குக் களமாக விளங்குவது உடலே. உடல் என்பது பொறிகளால் (புலன்களால்) ஆனது. புலனின்பத்தை அனுபவிக்க விரும்பும் கட்டுண்ட ஆன்மாவிற்கு அதன் தகுதியின் அடிப்படையில் செயலின் களமாக ஓர் உடல் வழங்கப்படுகின்றது. முன்னர் கண்டது போல் உடல் பற்பல மாற்றங்களை அடைகின்றபோதிலும் தான் மாறாமல் இருப்பதனை யாரும் அறியமுடியும். எனவே செயலின் களத்தை அறிபவனுக்கும், அந்த செயல்கள் நடைபெறும் களத்திற்கும் இடையே வேறுபாடு உண்டு. அதாவது கட்டுண்ட நிலையில் வாழும் ஆன்மா தான் உடலில் இருந்து வேறுபட்டவன் என்பதனைப் புரிந்துகொள்ளலாம் என்கிறது பகவத்கீதை.

மேற்படி கருத்தினை நோக்கின் உடலாகிய களத்தை அறிபவன் ஆன்மா. ஒவ்வொரு உடலிலும் இரண்டு ஆன்மாக்கள் உள்ளன. ஒன்று ஜீவாத்மா, மற்றையது பரமாத்மா. எல்லா உடல்களிலும் நானும் அறிபவனாக உள்ளேன் என்று பகவான் ஸ்ரீகிருஷ்ணர் குறிப்பிடுவதனைப் பதின்மூன்றாம் அத்தியாயத்தின் மூன்றாவது சுலோகம் சுட்டி நிற்பதிலிருந்து அதனைப் புரிந்துகொள்ளமுடியும். மேலும் இவ் அத்தியாயத்தின் ஐந்தாவது சுலோகத்தில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் வேத நூல்களை, குறிப்பாக வேதாந்த சூத்திரத்தில் செயலின் களத்தை அறியும் ஆன்மா, பரமான்மா என்பவை பற்றி நுணுக்கமாக விளக்கப்பட்டுள்ளதனை மேற்கோள் காட்டுகின்றார்

> *"ருஷிபிர் பஹூதா கீதம் சந்தோபிர் விவிதை: ப்ருதக்*
> *ப்ரஹ்ம-ஸூத்ர-பதைஷ் சைவ ஹேதுமத்பிர்-வினிஷ் சிதை:"*
>
> ***(பகவத்கீதை, 13.5)***

இதனை யசூர் வேதத்தின் பிரிவான தைத்திரீய உபநிடதமும் வலியுறுத்தி நிற்கின்றது (ப்ரஹ்ம புச்சம் ப்ரதிஷ்டா). ஆனால் பரமாத்மா அறிபவர்களில் உயர்ந்தவன். அதாவது ஜீவாத்மா தனது உடலை மட்டுமே அறிகிறது. ஆனால் பரமாத்மா அனைத்து உடல்களையும் அறிகிறது. முழுமுதற் கடவுளின் சக்தி அன்னமயம் எனும் ரூபத்தில் தோன்றுகின்றது. இது பரமனைப் பௌதிகமாக உணர்வதாகும். பின்னர் பிராணமயம் எனும் நிலையில் உயிரின் அறிகுறிகளில்

பரம உண்மையினை உணர்கின்றான். மனோமயம் எனும் அடுத்த நிலையில் உயிரின் அறிகுறிகளைத் தாண்டி எண்ணுதல், உணர்தல், விரும்புதல் என்பவற்றின் மூலம் உணர்கிறான். விஞ்ஞானமயம் எனப்படும் பிரம்மனை உணரும் நிலையில் ஆன்மாவின் மனமும், உயிரின் அறிகுறிகளும் ஆன்மாவில் இருந்து பிரித்து அறியப்படுகின்றன. அடுத்து, ஆனந்தமயம் எனப்படும் உன்னத நிலையில் பூரண ஆனந்தமயமான தன்மை உணரப்படுகின்றது. இவ்வாறு ஆன்மா பிரம்மத்தை உணர்வதில் ஐந்து நிலைகள் உள்ளன (பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 2008: 657). ஆத்மன் தன்னை ஆனந்தமயத்துடன் இணைப்பதில் இன்பம் காண முடிவு செய்யும்பொழுது அவன் பக்குவமடைகின்றான் என்கிறது வேதாந்த சூத்திரம்.

மேலும் ஆன்மாவின் முக்குணங்கள் பற்றியும் பகவத்கீதை பேசுகின்றது. குறிப்பாக பகவத்கீதையின் பதினான்காவது அத்தியாயத்தில் அவை உபதேசிக்கப்பட்டன. ஸத்வம், ராஜஸம், தாமஸம் என்ற குணங்கள் பிரகிருதியில் இருந்து தோன்றியவை. அவை அழிவில்லாத ஆன்மாவை உடலோடு வலுவாகப் பிணைத்துவிடுகின்றன. ஸத்வ குணமென்பது நிர்மலமானது. அது சுகத்தின் சேர்க்கையாலும், ஞானத்தின் சேர்க்கையாலும் ஆன்மாவைக் கட்டிப் பிணைக்கிறது. ஆசையினாலும், பற்றுதலாலும் ஏற்படும் அன்பே ராஜஸம் எனப்படும். அது கர்மங்களில் பற்றுதலை உண்டாக்குவதன் மூலம் ஆன்மாவைப் பிணைக்கிறது. தாமஸம் என்பது அஞ்ஞானத்தால் உண்டாகிறது. அது சகல பிராணிகளையும் மயங்கச் செய்கிறது. அசட்டை, சோம்பல், உறக்கம் என்பவற்றால் ஆன்மாவைப் பிணைக்கிறது. சில சமயங்களில் ஸத்வ குணமும், சில சமயங்களில் ராஜஸ குணமும், இன்னும் சில சமயங்களில் தாமஸ குணமும் மேலோங்கி விளங்குகின்றன. ஸத்வ குணம் ஓங்கியிருக்கும்போது மரணமடைபவன் ஆன்ம தத்துவத்தை அறிந்தவர்கள் அடைந்துள்ள நிர்மலமான லோகங்களை அடைவர். ராஜஸ குணத்தோடு மரணமடைபவன் கர்மப்பற்றுடையவர்களுக்கு மத்தியில் பிறப்பான். தாமஸ குணத்தோடு இறப்பவர்கள் கீழான பிறவிகளை எய்துவர். பிரகிருதியால் உண்டாகி செயல்களை நடத்தும் இம் முக்குணங்களைக் கடந்து எவனொருவன் சலனமில்லாத பக்தியோகத்தால் என்னை உபாசனை செய்கின்றானோ அவன் பிரம்மமாகும் தகுதியைப் பெறுகின்றான் என்கிறார் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் (பகவத்கீதை, 14.26).

மானுட உடல் முத்திக்கு வித்தாகக்கூடியது என்பதனையும் பகவத்கீதை தெளிவுபடுத்துகின்றது. பகவத்கீதையில் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் முத்திக்கு இரண்டு வழிகளைப் பரிந்துரைந்தார். ஒன்று செயலைத் துறத்தல், இரண்டாவது பக்தியுடன் செயற்படல். கர்மயோகம் என்ற ஐந்தாவது அத்தியாயத்தில் மேற்படி இரண்டில் எது சிறந்தது என்ற அர்ஜுனனின் வினாவிற்கு பக்தித் தொண்டில் ஈடுபடுவதே சிறந்தது என்கிறார் பகவான் (பகவத்கீதை 5.2). உடல் நிலையில்லாதது. கர்ம வினைகளுக்குக் களமாவது. ஆனால் ஒருவன் தன்னிலையை உணர்ந்து, ஆன்ம ஞானம் பெற்று; பலன் நோக்காது; கிருஷ்ண உணர்வில் செயலாற்றும்போது அவனது செயலின் விளைவுகள் அவனைப் பாதிப்பதில்லை. அவன் பௌதிக பந்தங்களில் இருந்து விடுபட்டு; முத்தியடைகின்றான் (பகவத்கீதை, 5.2, 5.3). எனவே மானுட உடல் கிருஷ்ண உணர்வில் செயலாற்றுவதன் வழி முத்திக்கு வித்தாவதனை பகவத்கீதை விளக்கி நிற்கின்றது எனலாம்.

ஒருவன் பரப்பிரம்மத்தை அறிவதனால் மரணமற்ற தன்மையினை எய்துகின்றான் என்றும், அந்த ஆதியற்ற பரம்பொருள் உள்ளபொருள் என்றோ, இல்லாதபொருள் என்றோ கூறமுடியாதது என்றும் பகவத்கீதை சுட்டிநிற்கின்றது (பகவத்கீதை, 13.12). இங்கு ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களின் வியாக்கியானம் நோக்கத்தக்கது. ''பரப்பிரம்மத்தை அறிந்த பின் ஆன்மாவுக்குத் தான் வேறு, அது வேறு என்ற வேறுபாடு இல்லை. பிரம்மத்தை அறிபவன் பிரம்மமாகின்றான். ஆகவே பிரம்மஞானம் பெற்றவன் பிரம்ம நிர்வாணம் அல்லது மோட்சத்தை அடைகின்றான். அது மனம் மொழியைக் கடந்த பெருநிலை'' என்கிறார் சுவாமி சித்பவானந்தர் (1999: 641). இதனையே பிருஹதாரண்யக உபநிடதம் 'அஹம் ப்ரஹ் மாஸ்மி' அதாவது நான் பிரம்மம், நான் ஆன்மீகமயமானவன் என குறிப்பிட்டிருந்தமையும், சாந்தோக்கிய உபநிடதத்தின் மகாவாக்கியமான 'தத்துவமஸி' என்பதும் 'நீயே அதுவாகிறாய்' அதாவது ஆன்மாவும் பிரம்மமும் ஒன்றே என்பதனை வலியுறுத்தி நின்றமையும் நோக்கத்தக்கது. தன்னை அறிதலே முத்திக்கு மார்க்கம் என்கிறது பகவத்கீதை. தன்னை அறிதல் என்பது ஆன்மா தன்னை உணர்தலாகும். தன்னை உணர்ந்த ஆன்மா தானே பிரம்மம் என உணர்கின்றது. பகவத்கீதையைப் பொறுத்தவரை இவ்வுணர்வு கிருஷ்ண உணர்வாகும்.

இங்கு பிரம்மத்தை அறிதல் என்பது குறித்துப் பேசுகையில், அறிவதற்கான மார்க்கம் குறித்த வினா எழுவது தவிர்க்கமுடியாதது. அவ் வினாவிற்குப் பகவத்கீதையின் பதின்மூன்றாம் அத்தியாயத்தின் இருபத்தைந்தாம், இருபத்தாறாம் சுலோகங்கள் பதிலளித்து நிற்கின்றன. ஆன்மா தனக்குள் இருக்கும் பரமான்மாவினை நான்கு வகையான மார்க்கங்களினூடாக உணர முனைகின்றது. சிலர் தியானத்தால் திருந்திய அந்தக் கரணத்தால் உள்ளத்தால் பரமான்மாவைப் பார்க்கிறார்கள். சிலர் ஸாங்கிய யோகத்தாலும், மற்றும் சிலர் கர்மயோகத்தாலும் பரமான்மாவைப் பார்க்கிறார்கள். இன்னும் சிலர் இத்தகைய உண்மைகளை உணராதவர்களாயினும் பெரியோர் சொற்கேட்டு அதில் பெருநம்பிக்கை வைத்தொழுகிப் பக்தியால் பரமான்மாவைப் பார்க்கிறார்கள். கர்மயோகம், ராஜயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய இந்நான்கு மார்க்கங்களும் பகவத்கீதையில் சம அந்தஸ்துப் பெறுகின்றன. கர்மயோகம் ஆற்றலைத் தருகிறது. ராஜயோகம் மனோவலிமையை வளர்க்கிறது. பக்தி அன்பைப் பெருக்குகின்றது. ஞானம் அறிவை வளர்க்கின்றது. பூரணமான ஆன்மாவிடம் இவை அனைத்தும் ஒருங்கே வளர்ச்சியடைந்திருக்க வேண்டும் என்கிறது பகவத்கீதை.

## திருமந்திரத்தில் ஆன்ம விசாரம்

இப்பகுதியானது திருமந்திரத்தினை ஆய்வு எல்லையாகக்கொண்டு ஆன்ம விசாரம் பற்றி ஆராய்கின்றது. உண்மையில் ஆன்ம விசாரம் அல்லது பிரம்ம விசாரம் என்பதே இந்திய தத்துவங்களின் பிரதான தேடலாக அமைந்து காணப்படுகின்றது. அந்தவகையில் ஆன்மாவின் உண்மைத்தன்மை, அதன் இயல்புகள் மற்றும் இலக்கணங்கள், ஆன்மாவின் இறுதி இலட்சியம் என்பன பற்றி ஆராய்வதே இப்பகுதியின் நோக்கமாகும்.

மெய்ப்பொருட்களில் ஒன்றாக விளங்கும் ஆன்மா பற்றிய விசாரத்தில் சமய மற்றும் தத்துவஞானிகள் வெவ்வேறுபட்ட முடிவுகளை வெளிக்கொணர்ந்தனர். சிலர் ஆன்மா உண்டு

எனவும் அதுவே உடலினுடைய இயக்கத்திற்கு அடிப்படையாக விளங்குகிறது என்றும் சிலர் ஆன்மாக்கள் எண்ணிறைந்தவை என்றும் இன்னும் சிலர் ஆன்மா என்ற ஒன்று இல்லை என்பதோடு அதனைத் தெளிவாக அறிந்துகொள்ளமுடியாது என்றும் குறிப்பிடுகின்றனர். இந்நிலையில் அளவைப் பிரமாணங்களின் வழி மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகளினூடாக பின்வரும் ஒழுங்குபடுத்தபட்ட முடிவுகளை வெளிக்கொணர்ந்தனர். அவைமுறையே,

1. ஆத்மவாதம் - ஆன்மா உண்டு என்பதாகும். அது உடலினுடைய இயக்கத்திற்குக் காரணம் என வலியுறுத்துகின்றது. எடுத்துக்காட்டாக, உபநிடதம், சித்தாந்தம் போன்ற தத்துவங்களைக் கூறிக்கொள்ளலாம்.
2. ஏகான்மவாதம் - ஆன்மாக்கள் பல என்பது பொய்யானதாகும். ஜீவனானது தனியான்மாவாகும். மேற்குறித்த கருத்தியலைச் சங்கர வேதாந்தம் தெளிவுபடுத்தி நிற்கின்றது.
3. அனேகாத்மவாதம் - ஆன்மாக்கள் எண்ணிறைந்தவை எனக் கூறுகின்றது. இத்தகைய சிந்தனைகளை இராமானுஜ, மத்துவ வேதாந்தம் மற்றும் சாங்கிய தத்துவங்களிலிருந்து அறிந்துகொள்ளலாம்.
4. அனாத்மவாதம் - ஆன்மா இல்லை என்பதாகும். குறிப்பாக பௌத்தம், உலகாயுதம் போன்ற தத்துவங்கள் இத்தகைய தன்மையினை வலியுறுத்தி நிற்கின்றன.

மேற்குறித்த கருத்தியல்களை அடிப்படையாகக்கொண்டு ஆன்ம விசாரம் பற்றிய கருத்துக்களை நோக்கும்போது, பொதுவாக ஆன்மாவினை நாம் காட்சியால் கண்டு விளக்கமுடியாது. இதனாலேதான் பௌத்தம், உலகாயுதம் போன்ற தத்துவங்கள் அனாத்மவாதத்தினை வலியுறுத்தியிருந்தது. மாறாக, திருமந்திரம் மற்றும் சைவசித்தாந்தம் போன்ற தத்துவங்கள் ஆன்மாவின் உண்மைத்தன்மையினைக் கருதலளவைப் பிரமாணத்தினூடாகவே விளக்கியுள்ளனர். இந்தவகையில், உடலை அடிப்படையாகக் கொண்டு ஆன்மாவினை நோக்கும்போது, ஆன்மா, தோற்றமாயுள்ள பருப்பொருளா அல்லது வேறு தனிப்பொருளா என நாம் விவாதிக்கும்போது கை, கால் முதலிய உறுப்புக்களானவை எனது உடலின் அங்கங்களாகும். இங்கு ''எனது'' என்பது எதுவென வினாவும்போது, அது உடலினின்று வேறான ஒன்று என்பது புலப்படும். அதுவே ஆன்மா. அதன் உடைமைதான் உடல் என அனுமானித்து அறிகின்றோம். இதனையே மெய்கண்டார்,

> *''உளது இலது என்றலின் எனது உடல் என்றலின்*
> *ஐம்புலன் ஒடுக்கம் அறிதலின் - கண்படில்...''*

என்ற சூத்திரத்தின் மூலம் வலியுறுத்தியுள்ளார். மேலும் உபநிடதங்கள் ஆன்மா பற்றித் தெளிவுபடுத்தும்போது, தைத்திரிய உபநிடதமானது ஆன்மா உடலுக்குள்ளே ஐந்து வகையான கோசங்களினால் மூடப்பட்டுள்ளது எனத் தெளிவுபடுத்துகின்றது. அவைமுறையே, அன்னமயகோசம் (உணவு), பிராணமயகோசம் (சுவாசம்) மனோமயகோசம் (மனம்), விஞ்ஞானமயகோசம் (அறிவு), ஆனந்தமயகோசம் (மகிழ்ச்சி) என்பனவாகும். இருந்தும் இவ்வான்மா அழிவற்றது எனக் குறிப்பிடுகின்றது. அதாவது வண்டியிலே கட்டப்பட்ட

குதிரைபோல ஆன்மாவும் ஒருவனுடைய சாகரத்தில் கட்டப்பட்டுள்ளது. இந்நிலையில் சாகரம் அழிவுக்குரியது. ஆன்மா அழிவற்றது என்பது இதன்மூலம் அறிந்துகொள்ளப்படும் உண்மையாகும்.

மேற்குறித்த சிந்தனையை அடியொற்றியதாகவே திருமந்திரம் வலியுறுத்தும் ஆன்ம விசாரம் பற்றிய கருத்தியலும் தெளிவுறுகின்றது. அதாவது உடலின் இயக்கத்திற்கு உயிர் அல்லது ஆன்மா இன்றியமையாததொன்று என்பது திருமந்திரத்தின் முடிந்த முடிவாகும். ஆன்மாவானது கூத்தன் என்றழைக்கப்படுகின்றது. அதாவது உயிராகிய கூத்தன் உடலினுள் இருந்துகொண்டு செய்யவேண்டிய தொழில்களைச் செய்து வினைகளை அனுபவிக்கின்றது. இப்படிச்செய்யும் உயிர் உடலைவிட்டு நீங்கிய பின் உடல் உணர்வற்ற சடமாகின்றது. இதனையே திருமந்திரம்,

> *''காக்கை கவரில் என் கண்டார் பழிக்கில்என்*
> *பால்துளி பெய்யில் என் பல்லோர் பழிச்சில்என்..''*

*(திருமந்திரம், 340)*

என எடுத்துரைக்கின்றது.

எனவேதான், ஆன்மா உடம்பைவிடுத்து தனித்து நின்று தொழில்புரியாது. அறம் முதலிய உறுதிப்பொருட்கள் உயிர்பெற வேண்டுமாயின் அதற்குரிய முயற்சிகளை உடம்போடுகூடி நின்றே செய்தல் வேண்டும். ஆகவே ஞானசாதனமாகிய உடம்பினைப் பேணுதல் உயிர்க்கு இன்றியமையாதது எனும் உண்மையினை,

> *''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்*
> *திடம்பட மெய்ஞ்ஞானஞ் சேரவுமாட்டார்...''*

*(திருமந்திரம், 724)*

எனும் அடிகளின் மூலம் திருமந்திரம் வலியுறுத்துகின்றது.

மேலும் ஆன்வானது நித்தியமானதாகவும் வியாபகமானதாகவும் விளங்குவதோடு உடலில் நின்றும் வேறுபட்டு; இச்சா, ஞானா சக்திகளை உரித்தாய் கொண்டு; அதன் வழிவரும் இன்ப, துன்பங்களை ஏற்பதாய் உள்ளது என்பதனை அருணந்தி சிவாச்சாரியார்,

> *''உயிரெனப்படுவது இந்த உடனின் வேறளதாயிற்றுச்*
> *செயிருது இச்சா ஞானாச் சக்திகள் உடையதாகி............''*

எனும் அடிகளினூடாக ஆதாரப்படுத்துகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆன்மாக்கள் அனாதியானவை என்பது திருமந்திரம் போன்ற தத்துவங்களின் கருத்தாகும். ''பதியினைப் போற் பசு பாசம் அனாதி..'' எனவரும் திருமந்திர அடிகள் இதற்குச் சான்று பகர்கின்றன. இவை அனாதிதொட்டே மலங்களினால் பந்திக்கப்படுகின்றன. அதாவது நெல்லிற்குமி போலவும் செம்பிற்களிம்பு போலவும் பற்றியுள்ளது. இதனையே திருமந்திரம் ''மும்மலம் நெல்லினுக்கு முளையொடு தவிடுமிபோல்..'' (திருமந்திரம், 172) எனவும் சிவ ஞானபோதம் ''நெல்லிற்குமியும் நிகழ்செம்பினிற் களிம்பும் சொல்லிற் புதிதன்று தொன்மையயே...''

எனவும் குறிப்பிட்டிருக்கின்றன. எனவேதான் திருமந்திரம், சைவசித்தாந்தம் போன்ற தத்துவங்கள் மலங்களை அடிப்படையாகக்கொண்டு ஆன்மாக்களை வகைப்படுத்தி நோக்கியுள்ளமையும் இங்கு அறியக்கூடியதாயுள்ளது. அவைமுறையே,

1. சகலர் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களும் பீடிக்கப்பட்ட நிலையாகும்.
2. பிரளயாகலர் - ஆணவம், கன்மம், ஆகிய இருமலங்களோடு கூடியநிலையாகும்.
3. விஞ்ஞானகலர் - ஆணவம் மட்டும் பீடிக்கப்பட்ட நிலையாகும்.

மேற்குறித்த மும்மலங்களும் பீடிக்கப்பட்ட ஆன்மாக்களின் நிலையினைத் திருமந்திரம் பின்வரும் அடிகளினூடாக எடுத்துக்காட்டுகின்றது.

*'ஆணவ மாகும் விஞ்ஞான கலருக்குப்*
*பேணிய மாயைப் பிரளயா கலராகும்*
*ஆணவ மாயையுங் கன்ம மூன்றுமே*
*காணுஞ் சகலருக்குக் காட்டு மலங்களே'' (திருமந்திரம், 2241)*

மேலும் ஆன்மாவானது கேவலாவத்தை, சகலாவத்தை மற்றும் சுத்தாவத்தை எனும் மூவகை அவத்தைகளால் பீடிக்கப்பட்டுள்ளமை பற்றியும் திருமந்திரம் வலியுறுத்திநிற்கின்றது. இந்நிலையில் ஆன்மா ஆணவ மலத்தால் மறைக்கப்பட்டு எவ்வித ஆற்றல்களையும் வெளிப்படுத்தாது தனித்துக் கிடக்கும் இருள்நிலையே கேவலாவத்தை எனப்படும். இதனையே,

*''செறியுஞ் செயலில்லோன் திண்கார்த்தா அல்லோன்*
*கிறியின் மலன் வியாபி கேவலத்தோனே'' (திருமந்திரம், 2247)*

எனத் திருமந்திரம் வலியுறுத்துகின்றது.

ஆன்மா மாயையின் காரியப்பொருள்களாகிய உடல், கருவி, உலகு, நுகர்பொருள் ஆகியவற்றைப் பெற்றுள்ள இவ்வுலகியல் நிலையே சகலாவத்தையாகும். இதனைத் திருமந்திரம் ''கருவுற்றிடுஞ் சீவன் காணுஞ் சகலத்தே'' என எடுத்தாள்கின்றது. ஆன்மாக்கள் எவ்வித மலப்பீடிப்புமின்றி சுத்தமாக இருக்கும் நிலையே சுத்தாவத்தை எனப்படும். இதன் இயல்பினை,

*''இருவினை யொத்திட இன்னருட்சக்தி*
*மருவிட ஞானத்தின் ஆதனமன்னி...'' (திருமந்திரம், 2262)*

எனத் திருமந்திரம் விளக்கிநிற்கின்றது.

ஆக, ஆன்மாக்கள் இறைவனருளால் கேவலநிலையினின்றும் சகலநிலையை எய்தி அருள்நிலையாகிய சுத்தநிலையை அடைந்துகொள்கின்றன என்பது இதன்மூலம் அறிந்துகொள்ளப்படும் உண்மையாகும்.

ஆன்மாவினுடைய இயல்புகள் மற்றும் இலக்கணங்கள் குறித்து நோக்குகையில், ஆன்மா எதனையும் தானாக அறியமாட்டாதது; அறிவித்தால் மட்டும் அறியக்கூடிய தன்மையுடையது. அத்தோடு சார்ந்ததன் வண்ணமாகத் தொழிற்படும். அதாவது பெத்தநிலையில், குறிப்பாகக்

கட்டுண்ட நிலையில் ஆணவத்தைச் சார்ந்து நிற்கும். இந்நிலையில் எதைச் சார்ந்து நிற்கின்றதோ அதன் தன்மையைக்கொண்டு விளங்கும். சத்தைச் சாருகின்றபோது சத்தாகவும் அசத்தைச் சாருகின்றபோது அசத்தாகவும் விளங்கும் இயல்புடையது. இதனாலேயேதான் ஆன்மா 'சதசத்து' என்றழைக்கப்படுகின்றது. குறிப்பாக அறிவேயுருவாகிய பரம்பொருளைச் 'சித்து' எனவும் அறிவிலதாகிய பாசத்தை 'அசித்து' எனச் சைவசித்தாந்தம் எடுத்தாள்வதைக் கண்டுகொள்ளலாம். இதனையே திருமந்திரம்,

*''சத்தும் அசத்துஞ் சதசத்துந் தாண்கண்டு*
*சித்தும் அசித்துஞ் சேர்வுறாமே நீத்த....'' (திருமந்திரம், 1420)*

எனக் கூறுகின்றது.

மேலும் ஆன்மாவிற்கு உடலானது ஓர் ஊன்றுகோலாய் விளங்குகிறது என்பது உபநிடதம், சித்தாந்தம் போன்ற தத்துவங்களின் அசையாத நம்பிக்கையாகும். இதனையே, பார்ப்பது கண்ணல்ல, கண்ணைக் கருவியாகக்கொண்டு பார்க்க வைப்பது ஆன்மா எனவும் பேசுவது நாவல்ல, நாவைக் கருவியாகக்கொண்டு பேச வைப்பது ஆன்மா என விளக்கமளிக்கின்றது. எனவே, பொறிகள் எதுவுமின்றி எதனையும் அறிந்துகொள்ளமுடியாத ஆன்மாவிற்கு அறிவு என்ற பெயர் பொருத்தப்பாடற்றதாக விளங்குகிறது என்பது இதன்மூலம் அறிந்துகொள்ளும் தாற்பரியமாகும். இதனைத் திருவருட்பயன்,

*''பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு*
*அறிவு என்ற பெயர் நன்றற''*

எனும் அடிகளினூடாக எடுத்துக்காட்டுகின்றது.

எதுஎவ்வாறாயினும் ஆன்மாக்களினது இலட்சியம் கன்மங்களிலிருந்து விடுபட்டு பதியுடன் இரண்டறக் கலந்து பேரின்பநிலையாகிய முத்திநிலையை அடைதலாகும். இம்முத்தி நிலையை அடைவதற்குரிய வழிவகைகளுள் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய சைவ நாற்பாதங்கள் குறிப்பிடத்தக்கவையாகும். இவற்றைக் கடைப்பிடிப்பதன் மூலம் ஆன்மாக்களைப் பீடித்துள்ள மலங்கள் நீக்கம்பெறுகின்றன. இதனை,

*''சரியையில் மலம்கால் சரிந்திடும்*
*கிரியையில் அரைமலம் கெடுதியுறும்...''*

எனும் திருமந்திர வரிகள் தெளிவுறுத்தி நிற்கின்றன. அத்தோடு ஆன்மா மலங்களின் பிடியினின்றும் விடுதலை பெறுவதற்கு தன்னையறிதல் முதன்மையானதொன்றாக விளங்குகின்றது எனத் திருமூலர் வலியுறுத்துகின்றார்.

*''தன்னை யறியத் தனக்கொரு கேடில்லை*
*தன்னை யறியாமல் தானே கெடுகிறான்......''*

*(திருமந்திரம், 2355)*

எனும் வரிகள் இதனை ஆதாரப்படுத்தி நிற்கின்றன. அதாவது தன்னியல்பை அறிவதன் மூலம் சிவப்பேறாகிய பெரும் பயனை ஆன்மா அறிந்துகொள்கின்றது. இதன்படி சிவரூபத்தால்

ஆன்ம தரிசனமும் சிவதரிசனத்தால் ஆன்மசுத்தியும் வாய்க்கப்பெறுகின்றது. எனவேதான் தம்முள்ளே இறைவன் இருக்கின்றான் என்ற உண்மையினை உணர்ந்த ஞானிகளுக்கு உள்ளம் கருவறையாகவும் ஊனுடம்பு இறைவன் வீற்றிருக்கும் ஆலயமாகவும் மாற்றம் பெற்றுவிடும். இதனையே திருமந்திரம்,

*''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளற் பிரானுக்கு வாய்கோபுர வாசல்...''*

*(திருமந்திரம், 1823)*

எனத் தெளிவாக எடுத்துரைக்கின்றது.

மேற்குறித்த கருத்தியலைத் தெளிவுபடுத்தும் சைவசித்தாந்தம் ஆன்மா கன்மங்களிலிருந்து விடுபட்டு இறைவனுடன் இரண்டறக்கலந்து சிவானந்தத்தை அனுபவிக்கின்றது. அதாவது தாள், தலை எனும் இருசொற்கள் 'தாடலை' போன்று புணர்ந்து அத்துவிதப்படுதலே முத்திநிலையாகும் எனக் குறிப்பிடுகின்றது. இதனை திருவருட்பயன்,

*''தாடலைபோற் கூடியவை தானிநிகழா வேற்றின்பக்*
*கூடலை நீ ஏகமெனக் கொள்''*

என வலியுறுத்துவதிலிருந்து அறிந்துகொள்ளலாம்.

இவ்வாறாக சைவசித்தாந்த சாத்திரங்கள் அனைத்திற்கும், சைவத் திருமுறைகள் பன்னிரண்டினுள் பத்தாந் திருமுறையெனப் சிறப்புப்பெறும் திருமந்திரம் மெய்ப்பொருள் உண்மைகளை அதிலும் ஆன்ம விசாரம் பற்றி பல்வேறு எடுத்துக்காட்டுக்கள் மூலம் தெளிவாக எடுத்துரைப்பதில் தனிச் சிறப்புடையதாக விளங்குகிறது. எவ்வாறாயினும் ஆன்மாக்களின் இறுதி இலட்சியம் பிறவித் துன்பங்களிலிருந்து நீங்கி வீடுபேறடைதலேயாகும் என்பது திருமந்திரம், சைவசித்தாந்தம் போன்ற தத்துவங்களின் அசையாத நம்பிக்கையாகும். எனவே ஆன்மாக்கள் நல்ல கன்மங்களை ஆற்றும்போது, உலகெலாங் கடந்தும் மன்னுயிர்களுக்கு உயிராக நின்றும் அருள்புரியும் சிவப் பரம்பொருள் உபதேசக் குருவாக புறத்தே எழுந்தருளி அருள்புரிபவனாக விளங்குவான். இதனையே திருமந்திரம், ''எல்லாவுலகிற்கும் அப்பாலோன் இப்பாலாய், நல்லார் உள்ளத்து மிக்கருள் நல்கலால்..'' எனும் வரிகளால் அறிவுறுத்துகின்றது. ஆக, எமக்கு இச்சாகரம் கிடைத்ததன் நோக்கம் யாதெனில் இறைவனை வழிபட்டு முத்தியின்பம் பெறும் பொருட்டேயாகும்.

## ஒப்பீட்டாய்வு

பகவத்கீதை மற்றும் திருமந்திரத்தில் தெளிவுபடுத்தப்பட்டிருக்கும் ஆன்ம விசாரம் பற்றிய கருத்தியல்களை ஒப்பிட்டு நோக்குகையில், பகவத்கீதையானது உபநிடத தத்துவங்களின் விளக்கமாகவும் ஒழுங்கான தொகுப்பாகவும் அமைந்திருப்பதனைக் காணமுடிகின்றது. கீதை முழுவதுமே ''தத்துவமஸி'' என்ற உபநிடத மகாவாக்கியத்தின் விளக்கமாக அமைந்துள்ளதைக்

கண்டுகொள்ளலாம். இதுவே சுவாமி விவேகானந்தர் போன்ற சமயஞானிகள் ''உபநிடதங்களுக்கு ஒரு விரிவுரையாகக் கீதை விளங்குகிறது'' எனக் குறிப்பிட்டதன் தாற்பரியமுமாகும்.

குறிப்பாக கீதை ஆன்மா உள்பொருள், அது அழிவற்றது, உடல் அழியுமிடத்தும் ஆன்மா அழியாதது (கீதை, 2:22) எனத் தெளிவுபடுத்துவதோடு தோற்றம்பெற்ற ஆன்மாவானது கணப்பொழுதும் செயலாற்றாது இருப்பதில்லை எனவும் பிரகிருதியின் இயல்பான தத்துவத்தால் தொழிற்பட்டுக்கொண்டே இருக்கிறது (கீதை, 3:5) எனவும் விளக்கமளிக்கின்றது. இருந்தும் ''அறிவே சொரூபமான ஆன்மா அஞ்ஞானம் என்ற மாயத்திரையினால் மூடப்பட்டிருக்கிறது'' எனக் கீதை குறிப்பிடுகின்றது.

மேலும் உபநிடதங்கள் தெளிவுபடுத்திய ஆன்மாக்கள் ஐவகை கோசங்களினால் கட்டமைக்கப்பட்டுள்ளது என்ற கருத்தினைப் பகவத்கீதையும் முதன்மைப்படுத்தியுள்ளதை மேலே கண்டுள்ளோம். உடலாகிய களத்தை அறிபவன் ஆன்மா. ஒவ்வொரு உடலிலும் இரண்டு ஆன்மாக்கள் உள்ளன என்றும் எல்லா உடல்களிலும் நானும் அறிபவனாக உள்ளேன் என்றும் பகவான் ஸ்ரீகிருஷ்ணர் குறிப்பிடுவதிலிருந்து இதனை அறிந்துகொள்ளலாம். மேற்குறித்த கருத்தியல்களை அடியொற்றியதாகவே திருமந்திரமும் உடலின் இயக்கத்திற்கு ஆன்மா இன்றியமையாதது என்று விளக்குகின்றது. அவ்வாறு உடலை இயக்கும் ஆன்மாவைக் கூத்தன் என்றழைக்கின்றது திருமந்திரம். எனவேதான் ஆன்மா உடம்பைவிடுத்து தனித்து நின்று தொழில்புரியாததோடு ஞானசாதனமாகிய உடம்பினைப் பேணுதல் உயிர்க்கு இன்றியமையாதது எனும் உண்மையினை ''உடம்பார் அழியில் உயிரார் அழிவர்'' எனும் அடிகளினூடாக எடுத்துக்காட்டி நிற்கின்றது.

மேற்குறித்த கருத்தியல்களைத் தொகுத்து நோக்குகையில் ஆன்மாவும் பிரம்மமும் அடிப்படையில் ஒன்று என்பதனை உபநிடதம் முதற்கொண்டு பகவத்கீதை மற்றும் திருமந்திரம் ஈறான தத்துவங்கள் முதன்மைப்படுத்தியுள்ளதை அறிந்துகொள்ளலாம். குறிப்பாக ஆன்மாவும் பரமாத்மாவும் ஒன்று என்பதைத் திருமந்திரம் ''சீவன் எனச் சிவன் என்ன வேறில்லை, சீவனார் சிவனாரை அறிகிலர்'' எனும் அடிகளினூடாக வலியுறுத்தியிருந்ததை அறிந்துகொள்ளலாம்.

ஆன்மாக்களின் இயல்புகள் மற்றும் அதன் வகைகள் குறித்த கருத்துக்களை ஒப்பு நோக்குகையில் குறிப்பாகக் கீதை ஆன்மாக்களின் இயல்புகள் அதன் தன்மைகளை அடிப்படையாகக்கொண்டு ஆன்மா நிர்மலமானது என்பதோடு; சுகத்தின் சேர்க்கையாலும் ஞானத்தின் சேர்க்கையாலும் ஆன்மாவைக் கட்டிப்பிணைப்பது ஸத்துவ குணத்திற்குரிய பண்பு என்றும்; ஆசையினாலும் பற்றுதலாலும் ஏற்படும் அன்பு ராஜஸ குணத்திற்குரியது என்றும்; தாமஸம் என்பது அஞ்ஞானத்திற்குரியது என்றும் தெளிவுபடுத்துகின்றது. திருமந்திரமும் சைவசித்தாந்தக் கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு ஆன்மாக்களின் இயல்புகள் குறித்து தெளிவுபடுத்தியிருக்கின்றது. ஆன்மாக்கள் அனாதிதொட்டே மலங்களினால் பந்திக்கப்படுகின்றன என்று கூறும் திருமந்திரம், இம்மலங்களை அடிப்படையாகக்கொண்டு அவற்றின் தன்மையில் சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலர் என ஆன்மாக்களை வகைப்படுத்தி நோக்கியுள்ளமையினையும் அறியக்கூடியதாகவுள்ளது.

இறுதியாக முத்தி பற்றியும் அதனை அடைவதற்குரிய வழிவகைகள் பற்றியும் இவ்விரண்டு தத்துவங்களினூடாக நோக்கும்போது, முத்திக்கு சிறந்த வழியாக கீதை ஞானத்தையே முதன்மைப்படுத்துகின்றது. இத்தகைய கருத்தினை அத்வைத வேதாந்தியான சங்கரரும் வலியுறுத்தியிருந்தார். ''காமரூபமான அஞ்ஞானத்தை ஞானவாளால் வெட்டு'' என்ற கீதையின் சுலோகத்தினைச் சங்கரர் எடுத்துக்காட்டியிருந்தார். இத்தகைய ஞானம் பற்றிய கருத்தினை திருமந்திரமும் தெளிவுபடுத்தியிருந்தபோதிலும் ஞானம் இறைவனது திருவருளாலேயே உண்டாகின்றது என்கின்றது. அவனது திருவருள் கிடைத்தால் எல்லா நலன்களும் எளிதிற் கிடைக்கும் என்பதனைத் திருமந்திரம்,

*''பிரானரு ளுண்டெனின் உண்டுநற் செல்வம்*
*பிரானரு ளுண்டெனின் உண்டுநன் ஞானம்...''*

எனும் அடிகளினூடாகச் சுட்டிநிற்கின்றது.

மேலும் கீதை, மனிதனில் தெய்வம் நித்தியமாய் உள்ளத்தின் உள்ளொளியாய் உறைந்திருப்பதை குறிப்பாக உணர்த்துகின்றது. இருந்தும் அறியாமை என்கின்ற இருளால் அது எமக்கு மறைக்கப்பட்டுள்ளது எனக் குறிப்பிடுகின்றது. இதனையே திருமந்திரம் ''தன்னையறியாமல் தானே கெடுகிறான்'' என்ற அடிகளினூடாகத் தெளிவுபடுத்துகின்றது. அதாவது தன்னியல்பை அறிவதன் மூலம் சிவப்பேறாகிய பெரும்பயனை ஆன்மா அறிந்துகொள்கிறது. இதனால் ஆன்ம தரிசனமும் சிவ தரிசனமும் வாய்க்கப்பெறுகின்றது என திருமந்திரம் விளக்கி நிற்கின்றது.

## முடிவுரை

மேற்குறித்த கருத்துக்களை அடிப்படையாகக்கொண்டு ஒப்புநோக்குகையில் ஆன்மா நித்தியமானது என்றும்; ஆன்மாவின் களமாகிய உடல் அழிவுடையது என்றும்; ஆன்மா உணர்வுமயமானது (சைதன்யம்) என்றும்; உணர்வுமயமான ஆன்மா தன்னை உணர்வதோடு, தன்னுள் இருக்கும் பரப்பிரம்மனை உணரும்போது (கிருஷ்ண உணர்வில் திளைக்கும் போது) அது பிரம்மனாகிறது என்றும்; அதுவே முத்தி என்றும் பகவத்கீதை விளக்கி நிற்கின்றது. ஆன்மா உடலினின்று வேறானது என்றும்; உடலின்றி ஆன்மா தனித்து இயங்காது என்றும்; பிரம்மத்தைப் போல் ஆன்மா அனாதியானது என்றும்; அது மும்மலங்களால் பீடிக்கப்பட்டுள்ளது என்றும்; பரம்பொருளின் அருளால் மலங்கள் நீங்கி ஆன்மா தன்னியல்பை அறியும்போது அது தன்னுள் பிரம்மத்தைக் கண்டு சிவப்பேறாகிய பெரும்பயனை அடைந்து பதியுடன் இரண்டறக் கலந்து பேரின்பநிலையாகிய முத்தி நிலையை அடைகிறது என்றும் திருமந்திரம் விளக்கி நிற்கின்றது. எனவே வேத இலக்கியங்களின் மகாவாக்கியங்கள் சுட்டுவது போன்று 'ஆத்மனும் பிரம்மனும் இரண்டல்ல; ஒன்றே' என்பதனை வலியுறுத்தும் இவ்விரு நூல்களும் முழுமுதற் கடவுள் பற்றிய கருத்தில் வேறுபட்டு நிற்பினும் ஆன்ம விசாரத்தில் ஒன்றுபட்டு நிற்கின்றமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

**உசாத்துணை நூல்கள்**


ஆச்சாரிய வினோபா பாவே., 1957. *கீதைப் பேருரைகள்.* (7ம் பதிப்பு). தஞ்சாவூர்: சர்வோதயப் பிரசுராலயம்.

கண்ணப்பமுதலியார்., 1979. *தமிழ் மந்திரம் மூலமும் விளக்கமும்.* சென்னை: வானதி பதிப்பகம்.

கல்யாணசுந்தரம். கே., 2002. *திருமூலர் அருளிய திருமந்திரம்.* மதுரை: மதுரை தமிழ் இலக்கிய மின்தொகுப்பு.

கிருஸ்ணராஜா, சோ., 1995. *சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல்.* கொழும்பு: இந்து கலாசார அலுவல்கள் திணைக்களம்.

சிவகுருநாதன். சி., 1990. *மெய்கண்டதேவர் அருளிச்செய்த சிவஞானபோதம்.* யாழ்ப்பாணம்: செட்டியார் பதிப்பகம்.

சிவபாதசுந்தரம். சு., 1980. *திருவருட்பயன் விளக்கவுரை.* யாழ்ப்பாணம்: சைவபரிபாலன சபை.

சுப்புரெட்டியர், ந., 2001. *சைவசித்தாந்தம் ஓர் அறிமுகம்.* திருநெல்வேலி: கழகம்.

சுவாமி ஆசுதோஷானந்தர்., 2001. *ஸ்ரீமத் பகவத்கீதை: கடமை மூலம் கடவுள்.* சென்னை: ஸ்ரீ ராமகிருஷ்ண் மடம்.

ஞானகுமாரன், நா., 2012. *சைவசித்தாந்தத் தெளிவு.* யாழ்ப்பாணம்: தூண்டி கேணியடி, திருநெல்வேலி.

......., 2012. வேதாந்த மெய்யியல். கொழும்பு: சேமமடு பொத்தகசாலை

திருவிளங்கம்,மு., (புத்துரை) 1971. *அருணந்தி சிவாச்சாரியார் அருளிச்செய்த சிவஞான சித்தியர் சுபக்கம்,* யாழ்ப்பாணம்: கூட்டுறவு தமிழ்நூற் பதிப்பு விற்பனைக் கழகம்.

தேவிபிரசாத் சட்டோபாத்யாயா., 1976. *இந்தியத் தத்துவ இயலில் நிலைத்திருப்பனவும் அழிந்தனவும்.* சென்னை: சென்னை புக் ஹவுஸ்.

பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்., 2008. *பகவத்கீதை: உண்மையுருவில்.* (2ம் பதிப்பு), மும்பை: பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை.

பாலகங்காதர திலகர்., 2001. *கீதை ஆய்வுரை (கீதா இரகசியம்):* முதல் பாகம். தமிழில் ரா.ரங்கசாமி, சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ்.

......., 2001. *கீதை ஆய்வுரை (கீதா இரகசியம்):* இரண்டாம் பாகம். தமிழில் ரா.ரங்கசாமி, சென்னை: பாவை பப்ளிகேஷன்ஸ்.

மாணிக்கம், அ., 2004. *திருமூலர் அருளிய திருமந்திரம்.* சென்னை: வர்த்தமானன் பதிப்பகம்.

வசந்தகுமார், இராச., 2016. *திருமூலர் அருளிய திருமந்திரம் பத்தாம் திருமுறை.* கோவை: கற்பகம் பல்கலைக்கழகம்.

ராஜாஜி., 1974. *கண்ணன் காட்டிய வழி.* (5ம் பதிப்பு). சென்னை: வானதி பதிப்பகம்.

வெள்ளைவாரணனார், க., 2002. *சைவசித்தாந்த சாத்திர வரலாறு*. தஞ்சாவூர்: தமிழ்ப் பல்கலைக்கழகம்.

ஸ்வாமி தயானந்த ஸரஸ்வதி., 2002. *பகவத்கீதையின் ஸாராம்சம்*. (4ம் பதிப்பு) சென்னை: வானதி பதிப்பகம்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர்., 1999, *ஸ்ரீமத் பகவத்கீதை. (26ம் பதிப்பு) திருப்பராய்த்துறை.* ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்.

Sri Aurobindo., 1949. *Essays on Gita*: Second Series. (4th edition). Calcutta: Arya Publishing House.

Swami Abhedananda., 1969. *Bhagavad Gita: The Divine Message*, India: Ramakrishna Vedanta Math.

Swami Sharvananda., 1969. *Religion & Philosophy of the Gita*. Jaffna: Dr.A.Cumaraswamy.